# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை புகையிரத சேவைகள்

# PROCUREMENT FOR THE SUPPLY OF 15,000 MTS of 16 x 1.5 SQMM ARMOURED UNDERGROUND CABLES

**SRI LANKA RAILWAYS – IFB No. – SRS F.7885**

1. இலங்கை புகையிரத சேவைகளுக்கு 15,000 மெ.தொ. 16 x 1.5 சதுர மிமீ கவசமிடப்பட்ட தரைகீழ் வடங்களை வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகளின் (கொழும்பு) சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்று 2022.11.04 ஆம் திகதியிலிருந்து 2022.11.29 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),**
**புகையிரத பெறுகை உபதிணைக்களம்,**
**ஒல்கட் மாவத்தை, கொழும்பு-10, இலங்கை.**

| | |
|---|---|
| **தொலைபேசி இலக்கங்கள்** | **: 94(11)2438078 அல்லது 94(11)2436818** |
| **தொலைநகல் இலக்கம்** | **: 94(11)2432044** |
| **மின்னஞ்சல்** | **: srs.sir@gmail.com** |
| **இணையதளம்** | **: www.railway.gov.lk** |

4. மேலேயுள்ள வடத்தை வழங்குவதற்கான கடந்தகால பதிவுகளுடன் கவசமிடப்பட்ட தரைகீழ் வடங்களை வழங்குவதற்கான இயலுமை மற்றும் செயல்வல்லமை ஆகியவற்றிற்கான ஆவணச்சான்றை (கடந்த 5 வருடங்களில் இலங்கையில் அதே வணிக உரிமைப் பெயரில் ஆகக் குறைந்தது 10 வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருத்தல்) அதே எண்ணிக்கையில் அல்லது வித்தியாசமான எண்ணிக்கையில் செயற்பாட்டு சான்றிதழ்களுடன் விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

   இந்த அம்சத்தின் வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்காக உற்பத்தியாளர்கள் ISO:9001:2008 தர அங்கீகாரம் பெற்ற தர உத்தரவாத சான்றிதழ்களை கொண்டுள்ளதுடன் உற்பத்தியாளர்/விலைமனுதாரர் கவசமிடப்பட்ட தரைகீழ் வடங்களை உற்பத்தி செய்தல்/வழங்கல் ஆகியவற்றில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆவணச்சான்றையும் முன்வைப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. 2022.11.04 ஆம் திகதியிலிருந்து 2022.11.29 ஆம் திகதி வரையும் பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 11,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகை உபதிணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 450,000 ரூபாவாகவிருப்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமொன்றாகவுமிருத்தல் வேண்டும்.

7. 2022.11.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**பெறுகை உபதிணைக்கள அலுவலகம்,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

குறிப்பீட்டு இல.: **SRS/F.7885**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**